வாக்குமூலம்

**நீதித்துறை நடுவர் எண்.2, நீதிமன்றம், திண்டுக்கல்,**

**வழக்கு எண்.227/2021**

**வழக்கு சாட்சி. 1**

| | | |
|---|---|---|
| பெயர் | : | **M.S.பாலன்** |
| தந்தை பெயர் | : | செல்லம் |
| கிராமம் | : | காந்திபுரம், ரவுண்டு ரோடு |
| தாலுக்கா | : | திண்டுக்கல் |
| ஜாதி | : | |
| தொழில் | : | ரியல் எஸ்டேட் |
| சமயம் | : | |
| வயது | : | **56** |

**23.05.2023**

**எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**குறுக்கு விசாரணை .**

1) இந்த வழக்கு சம்மந்தமாக எந்த தேதியில் நான் எதிரிக்கு வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் 09.01.2021ம் தேதி அனுப்பினேன். என்னிடம் காட்டப்படும் வழக்கறிஞர் அறிவிப்பு நான் அனுப்பியதுதான். வழக்கறிஞர் அறிவிப்பில் நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் மனு நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததுதானா என்றால் ஆமாம். இந்த பிராது மனுவிலும் , நிரூபண வாக்குமூலத்திலும் நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் நான் எனது வழக்கறிஞரிடம் சொன்னேன். குறிப்பிடபடவில்லை.

2) பிராது மனுவிலும் , வழக்கறிஞர் அறிவிப்பிலும், நிரூபண வாக்குமூலத்திலும் எதிரி என்னிடம் எந்த தேதியில் எங்கு வைத்து பணம் கேட்டார் என்பதை குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. பிராது மனுவிலும் , வழக்கறிஞர் அறிவிப்பிலும், நிரூபண வாக்குமூலத்திலும் எதிரி என்ன தொழில் செய்து வருகிறார் என்பதை குறிப்பிட்டுள்ளேனா என்றால் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறார் என குறிப்பிட்டுள்ளேன். வழக்கறிஞர் அறிவிப்பில் எதிரி என்ன காரணத்திற்காக என்னிடம் பணம் கேட்டார் என்ற விவரத்தை குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை.

3) வழக்கறிஞர் அறிவிப்பிலும், நிரூபண வாக்குமூலத்திலும் எதிரி எப்போது பணத்தை திருப்பி தருவதாக சொன்னார் என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் தற்பொழுது எந்த

முகவரியில் குடியிருக்கிறேன் என்றால் 11/1 காந்தி புரம், ரவுண்டு ரோடு, திண்டுக்கல் என்ற முகவரியில் குடியிருக்கிறேன். தாவா வழக்கு தவிர வேறு நபர்கள் மீதும் இந்த நீதிமன்றத்தில் நான் காசோலை வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மற்ற காசோலை வழக்குகளிலும் நான் தற்போது சொன்ன முகவரியைத்தான் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. நான் அந்த வழக்குகள் தாக்கல் செய்யும் போது வாடகை வீட்டில் குடியிருந்தேன். அந்த முகவரியை குறிப்பிட்டுள்ளேன்.

4) வாடகை வீட்டில் எந்த ஆண்டு முதல் எந்த ஆண்டு வரை குடியிருந்தேன் என்றால் தற்போது தேதி எனக்கு ஞாபகம் இல்லை. நான் மனுவில் குறிப்பிட்டுள்ள முகவரியில் நான் குடியிருக்கவில்லை என்றால் சரியல்ல. 10.10.2020ம் தேதி நான் வாடகை வீட்டில் குடியிருந்தேனா சொந்த வீட்டில் குடியிருந்தேனா என்றால் சொந்த வீட்டில் குடியிருந்தேன். பொதுவாக கடனாக பணம் கொடுக்கும் போது அதற்கு ஆதரவாக காசோலைகள், புரோ நோட்டுகள் வாங்குவது வழக்கம் என்றால் சரியல்ல. எதிரிக்கு பணம் கொடுத்ததாக சொல்லப்படும் நாளன்று காசோலையோ, புரோ நோட்டுக்களோ நான் வாங்கவில்லை என்றால் சரிதான்.

5) வழக்கறிஞர் அறிவிப்பிலும், பிராது மனுவிலும் தாவா காசோலையை எதிரி கையொப்பம் செய்து கொடுத்தார் என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எனது வங்கி கரூர் வைஸ்யா வங்கி என்றால் சரிதான். திண்டுக்கல்லில் கரூர் வைஸ்யா வங்கி எத்தனை கிளைகள் உள்ளது என்றால் 2 கிளைகள் உள்ளது. அந்த இரண்டு கிளைகளில் எந்த கிளையில் வசூலுக்கு செலுத்தினேன் என்பதை வழக்கறிஞர் அறிவிப்பிலும், பிராது மனுவிலும் சொல்லியுள்ளேனா என்றால் கரூர் வைஸ்யா வங்கி திண்டுக்கல் என்று மட்டுமே குறிப்பிடபட்டுள்ளது. எந்த கிளை என்று குறிப்பிடவில்லை. நான் கணக்கு வைத்துள்ள வரதராஜ் காம்ப்ளக்சில் உள்ள கரூர் வைஸ்யா வங்கிகிளையில் வசூலுக்கு செலுத்தினேன்.

6) என்னிடம் காட்டப்படும் ஆவணமான ரிட்டன் மெமோ எனக்கு வங்கியிலிருந்து கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த ரிட்டன் மெமோவிலும் எந்த கிளை என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ. 4 ரிட்டன் மெமோவில் கணக்காளர் என்ற இடத்தில் அழகம்மாள் என்ற பெயர் மட்டும் உள்ளது என்றால் சரிதான். அது எனது அம்மாவின் பெயர். நானும் எனது அம்மாவும் இணைந்து ஜாயிண்ட் கணக்கு வைத்துள்ளோம். வங்கியில் காசோலையை வசூலுக்கு செலுத்துவதற்கு முன்பு எதிரிக்கு தகவல் சொன்னேனா என்றால் சொன்னேன். அவர்தான் வசூலுக்கு செலுத்த சொன்னார். இந்த விவரத்தை நான் மனுவில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன்.

7) எனது வழக்கறிஞர் அறிவிப்பிலும், பிராது வாக்குமூலம் சொல்லப்படாத விசயங்களை நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வழக்கறிஞர் அறிவிப்பில் எதிரிக்கு பணம் கொடுத்ததாக 05.12.2012 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். காசோலையை தொகையை அன்றைய தேதியில் மொத்தமாக கொடுத்தேனா என்றால் ஆமாம். எதிரிக்கு பணம்

எங்கு வைத்து கொடுத்தேன் என்ற விவரத்தை வழக்கறிஞர் அறிவிப்பிலும், பிராதிலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன்.

8) எதிரிக்கு நான் பணம் கொடுக்கும் போது என்ன வயது என்றால் சுமார் 62 வயது இருக்கும். எனது கணக்குப்படி தற்போது எதிரிக்கு தற்போது 72 வயது என்றால் சரிதான். எதிரிக்கு தற்போது 87 வயது ஆகிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரிக்கு பணம் வட்டிக்கு கொடுத்தேனா என்றால் வட்டிக்கு கொடுக்கவில்லை. 2 மாதத்திற்குள் திருப்பி தருவதாக உறுதி கூறி நான் பணம் கொடுத்தேன். இந்த விவரத்தை அறிவிப்பிலும், பிராதிலும் சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை. நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன். பணத்தை நான் எதிரியிடம் எந்த வகையில் திருப்பி கேட்டேன் என்றால் நேரிலும், போன் மூலமாகவும் கேட்டேன். போனில் எந்த ஆண்டு எதிரியிடம் பணம் பற்றி கேட்டேன் என்று ஞாபகம் இல்லை.

9) எதிரி என்னிடம் பணம் கடனாக பெற்றதாக சொல்லப்படும் தேதியிலிருந்து காசோலையை வசூலுக்கு செலுத்தியதன் வரையிலான நான் போன் மூலம் பணத்தை திருப்பி கேட்டேனா என்றால் போன் மூலமும், நேரிலும் கேட்டேன். எனது அலைபேசி எண் என்ன என்றால் 9843082383 ஆகும். எதிரியின் அலைபேசி எண் என்ன என்றால் தற்போது ஞாபகம் இல்லை. எதிரி அவரது செல்போன் நம்பரை மாற்றி விட்டார். நான் எதிரி , எதிரியின் மனைவி, அவரது மகன் ஆகியோர் மீது திண்டுக்கல் நகர் வடக்கு காவல்நிலையத்தில் புகார் கொடுத்து அது பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் முதல் தகவல் அறிக்கை நான் கொடுத்த புகாரில் பதிவு செய்யப்பட்டதா என்றால் ஆமாம். **( முதல் தகவல் அறிக்கை குற்ற எண். 885/2018 ல் உள்ள முதல் தகவல் அறிக்கை சான்றிட்ட நகல் எ..சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

10) எ.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கையில் எதிரி என்னிடம் பணம் கேட்டதாகவும் அவ்வளவு பணம் இல்லை நண்பரிடம் வாங்கி தருகிறேன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 15.06.2018ம் தேதி எதிரி கடனை திருப்பி தருவதாக வீட்டிற்கு வரச் சொல்லி நான் வீட்டிற்கு சென்ற போது என்னிடம் பிரச்சனை ஏற்பட்டதாகஎ.சா.ஆ.1ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எ.சா.ஆ.1ல் குறிப்பிடப்பட்டுள்ள சம்பவத்திற்கு பின்பு எதிரிகள் முன்பிணை பெற்ற விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் மதுரை உயர்நீதிமன்றத்தில் முன்பிணை பெற்ற விவரம் எனக்கு தெரியும். அந்த வழக்கு சம்மந்தமாக திண்டுக்கல் நகர் வடக்கு காவல்நிலையத்தில் என்னையும், எதிரியையும் பலமுறை விசாரித்தார்கள் என்றால் எதிரிகள் முன்பிணை பெறுவதற்கு முன்பு விசாரித்தார்கள்.

11) எ.சாஆ.1 வழக்கு சம்மந்தமாக எதிரிகள் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் Quash மனு எதிரி தரப்பில் தாக்கல் செய்து அதில் நான் வழக்கறிஞர் வைத்து ஆஜராகியிருந்தேன் என்றால் சரிதான். Quash மனு தள்ளுபடி ஆகிவிட்டது. மேற்படி Quash மனு 02.02.2022ம் தேதி வரை விசாரணையிலிருந்து 02.02.2022ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் உயர் நீதிமன்ற உத்தரவுதான் Quash

மனுவில் தள்ளுபடி செய்யப்பட்ட உத்தரவு என்றால் சரிதான்.**( Crlop (MD) N0. 4170/2019 and crlmp (MD) N0,2513/2019 தேதி 02.02.2022 மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்தரவு எ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )**

12) திண்டுக்கல் நகர் வடக்கு காவல்நிலையத்தில் குற்ற எண். 885/2018 வழக்கில் 08.03.2022 ம் தேதி விசாரணைக்கு ஆஜராக அழைப்பாணை அனுப்பபட்டது என்றால் சரிதான். அந்த அழைப்பாணையின் அடிப்படையில் நகர் வடக்கு காவல்நிலையத்தில் விசாரணைக்கு ஆஜரானேன் என்றால் சரிதான். அன்றைய தேதியில் எதிரியையும் விசாரணை செய்தார்கள் என்றால் இல்லை. மேற்படி தேதியில் விசாரணை மீண்டும் 30.03.2022 ம் தேதி ஆவணத்தோடு ஆஜராவதாக எழுதிக் கொடுத்து விட்டுவந்தேன் என்றால் சரிதான்.

13) 30.03.2022 ம் தேதி நான் சொன்னவாறு காவல்நிலையத்தில் ஆஜராகவில்லை என்றால் சரியல்ல. ஆஜரானேன். நான் 30.03.2022 ம் தேதி ஆஜராகாததால் நான் கொடுத்த வழக்கு பிழையுடைய வழக்கு என காவல்நிலையத்தில் முடிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் காவல்நிலையத்தில் வழக்கு முடிக்கப்பட்டதாக தெரிந்து கொண்டேன் என தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் மேற்படி காவல்நிலையத்தில் கொடுத்த புகாரில் எதிரி 50 லட்ச ரூபாய் கடன் பெற்றிருந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

14) நான் மேற்படி காவல்நிலையத்தில் கொடுத்த புகாரில் குறிப்பிட்டுள்ள 50 லட்ச ரூபாய் கடனுக்காக தாவா காசோலை கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். ஆனால் மேற்படி காவல்நிலையத்தில் புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்யப்பட்ட பின்பு காவல்நிலையத்தில் விசாரணையில் கடன் தொகை பெற்றதை ஒப்புக் கொண்டு முன்பிணை பெற்ற பின்பு கடனை திருப்பி தருவதாக சொல்லி கடந்த 10.10.2020 ம் தேதி வழக்குகளை வாபஸ் பெற்றுக் கொள்ளுங்கள் என்று கூறி தாவா காசோலையை கொடுத்தார். 2 மாத தவணையில் காசோலை தொகையை தருவதாக கூறி கொடுத்தார். நான் எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு, பிராது மனு, நான் காவல்நிலையத்தில் கொடுத்த புகாரிலோ அது சம்மந்தமான நடவடிக்கைகள் குறித்தோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

15) எதிரிக்கு நான் கொடுத்ததாக சொல்லப்படும் 50 லட்ச ரூபாய் எனக்கு எவ்வகையில் கிடைத்தது என்று எனது அறிவிப்பிலோ, புகார் மனுவிலோ குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிடவில்லை. எதிரி என்னிடம் கடனாக வாங்கிய தொகை ரூ.50 லட்ச ரூபாய்க்குதான் காவல்நிலையத்தில் ஒரு வழக்கும், நீதிமன்றத்தில் காசோலை வழக்கும் 2 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் கடனாக வாங்கிய 50 லட்சத்தை தரவில்லை என காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். அந்த புகாரின் அடிப்படையில் ஏற்பட்ட பேச்சு வார்த்தையில் தாவா காசோலை என்னிடம் வாங்கிய கடன் தொகைக்காக கொடுத்தார். காசோலையை வசூலுக்கு செலுத்தி பணம் இல்லை என்பதால் தாவா வழக்கு தாக்கல் செய்தேன்.

16) நான் வருமான வரி செலுத்தி வருகிறேனா என்றால் செலுத்தி வருகிறேன். எத்தனை ஆண்டுகளாக வருமான வரி செலுத்தி வருகிறேன் என்றால் 15 ஆண்டுகளாக செலுத்தி வருகிறேன். 2012 ம் ஆண்டு நான் வருமான வரி செலுத்தியுள்ளேனா என்றால் செலுத்தியுள்ளேன்.

**( எதிரி தரப்பில் வழக்கறிஞர் கேட்டுக் கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.)**

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

N MEENATCHI

Digitally signed by N MEENATCHI
Date: 2023.05.27 17:05:11 +0530

Judicial Magistrate No.II
Dindigul.